**திவிநெகும நுண்நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியம் - 2016**

திவிநெகும மைக்ரோ நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும மைக்ரோ நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாமையுடன் அது சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் பிரதேசச்செயலகங்களின் இருப்புப் புத்தகத்தின் மிகுதியை விட அதிகமாகக் காணப்பட்ட பௌதிக மிகுதியின் பெறுமதி ரூபா 121,788 ஆனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகவும், 2014, 2015 ஆம் வருடங்களின் இருப்பு நட்டங்கள் ரூபா 2,406,670 ஆனது மீளாய்வாண்டில் இலாபத்திலிருந்து நீக்கப்பட்டமை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகவும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டிப் பெறுவனவு ரூபா 1,426,323 என்பதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 1,550,351 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் ரூபா 14,000,633 ஆன எழுதுகருவிகள் இருப்பு கணக்கு மிகுதியை விட அதிகமாகக் காணப்பட்ட பௌதீக இருப்புக் கணிப்பீட்டு அறிக்கையில் மிகுதி ரூபா 17,648,683 ஆன இருப்பு மிகுதிக்கு சீராக்கப்பட்டமை, இருப்புப் பெறுமதி ரூபா 410,067 ஆன இருப்பொன்று இருப்புப் புத்தகத்தில் உள்ளக்கப்படாமை மற்றும் கொஸ்வத்த களஞ்சியசாலையில் காணப்பட்ட ரூபா 994,585 பெறுமதியான பயன்படுத்தப்படாத இருப்பு இறுதியாக மிகுதியாகவுள்ள இருப்புக்களுடன் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் இருப்பு மிகுதியின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியவில்லை.

(ஆ) மாவட்டச் செயலக களஞ்சியசாலையில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 13,740,243 மிகுதி இருப்பிற்கான இனங்காணப்படாத இலாப ஒதுக்கம் ரூபா 1,249,123 ஆனது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், வங்கி சமூகங்களுக்கு விற்கப்பட்ட எழுதுகருவிகள் உள்ளடங்கலாக மாவட்டச் செயலகங்களின் பெற வேண்டிய ரூபா 29,559,575 ஆன மொத்தத் தொகைக்காக இணக்கப்படாத இலாப ஒதுக்கம் ரூபா 2,687,234 ஆக கணக்கிடப்பட்டமையால் ரூபா 1,438,111 ஆனது அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இணக்கப்படாத இலாப ஒதுக்க ஆரம்ப மற்றும் இறுதி மிகுதிகள் சரியாகச் சீராக்கப்படாமையால் உழைக்கப்பட்ட இலாபமாக ரூபா 408,901 ஆனது நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தபோதிலும், சரியான தொகைக்கான இணக்கப்படாத இலாப ஒதுக்கங்கள் சீராக்கபபட்டு உழைக்கப்படாத நட்டம் ரூபா

92,294 ஆன காரணத்தினால் எழுதுகருவிகள் விற்பனை இலாபம் ரூபா 501,195 ஆனது அதிகமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் இரு மாவட்டச் செயலகங்களுக்கான ரூபா 1,310,524 ஆன இருப்பு மிகுதிக்கான இருப்பு கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விறகுச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச மக்கள் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 770(2) | 2014 மற்றும் 2015 வருடங்களில் இருப்புக் கணிப்பீட்டின் பின்னர் நீக்கப்பட்டிருந்த பிரதான இருப்புக் களஞ்சியசாலையின் கிரயம் ரூபா 1,841,151 ஆன இருப்பு மற்றும் மாவட்டச் செயலக களஞ்சியசாலைகளில் நட்டமேற்பட்டதாக இனங்காணப்பட்ட கிரயப் பெறுமதி ரூபா 565,519 ஆன இருப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை இன்றி 2016 ஆம் வருடத்தில் செலவொன்றாகப் பதிவளிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 876(3) | நியதிச் சட்டமல்லாத நிதியமொன்று தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**2.4 பெறவேண்டிய கணக்கு**

இலங்கை சலுசலா நிறுவகத்திற்கு உரித்தான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த எழுதுகருவிகள் இருப்பு 2010 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டிருந்ததுடன் ஆனால், அதற்காக செலவிடப்பட்ட களஞ்சியசாலைக்கான வாடகை வைப்பு ரூபா 1,454,112 ஆனது மீண்டும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 23,314,160 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,865,974 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,448,186 ஆன முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தது. இம்முன்னேற்றத்திற்கு எழுதுகருவிகள் விற்பனை இலாபம் ரூபா 17,344,017 ஆல் உயர்வடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

மொத்தப் பெறுமதி ரூபா 53,805,931 ஆன நிலையான வைப்பு முதிர்ச்சிக்காலம் 3 நாட்கள் தொடக்கம் 6 மாதங்கள் வரையான குறுங்கால முதலீடுகளில் முதலீடு செய்ததன் காரணமாக நீண்டகால முதலீடுகளிலிருந்து பெறப்படக்கூடியதான வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் , 05 வருட கால தாமதத்தின் பின்னர் 2021 யூலை 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் நிதியத்தின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் யின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை நிறுவி கணக்குப் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படுகின்றது.